www.Padasalai.Net www.TrbTnpsc.com

# மூன்றாம் இடைப்பருவத் தேர்வு – 2025

## ஒன்பதாம் வகுப்பு

**நேரம்: 1.30 மணி** **கணிதம்** **மதிப்பெண்கள்:50**

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 7x1=7

1. 12 செ.மீ பக்க அளவுள்ள ஒரு கனச்சதுரத்தின் பக்கப்பரப்பு
அ) 144 செ.மீ $^2$ ஆ) 196 செ.மீ $^2$ இ) 576 செ.மீ $^2$ ஈ) 664 செ.மீ $^2$
2. இரு கனச்சதுரங்களின் பக்கங்களின் விகிதமானது 2:3 எனில் அதன் புறப்பரப்புகளின் விகிதங்கள்
அ) 4 : 6 ஆ) 4 : 9 இ) 6 : 9 ஈ) 16 : 36
3. 10மீ x 5மீ x 1.5மீ அளவுள்ள ஒரு நீர்த்தொட்டியின் கொள்ளளவு
அ) 75 லிட்டர் ஆ) 750 லிட்டர் இ) 7500 லிட்டர் ஈ) 75000 லிட்டர்
4. ஒரு தரவில் அதிக முறை இடம் பெற்றுள்ள உறுப்பின் மதிப்பு
அ) நிகழ்வெண் ஆ) வீச்சு இ) முகடு ஈ) இடைநிலை அளவு
5. சராசரியிலிருந்து அனைத்து n உறுப்புகளின் விலக்கங்களின் கூட்டுத்தொகை
அ) 0 ஆ) n–1 இ) n ஈ) n+1
6. x, x+2, x+4, x+6, x+8 என்ற தரவின் சராசரி 11 எனில் முதல் மூன்று தரவுகளின் கூட்டுச்சராசரி
அ) 9 ஆ) 11 இ) 13 ஈ) 15
7. முதல் 11 இயல் எண்களின் வர்க்கங்களின் சராசரி
அ) 26 ஆ) 46 இ) 48 ஈ) 52

**II ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி. (14–ஆம் கேள்வி கட்டாய வினா)** 5x2=10

8. 180 செ.மீ சுற்றளவு கொண்ட ஒரு சமபக்க முக்கோணத்தின் பரப்பளவைக் காண்க.
9. ஒரு கனச்செவ்வகத்தின் நீளம் 7.5மீ, அகலம் 3மீ, உயரம் 5 மீ, எனில் அதன் மொத்தப்பரப்பு மற்றும் பக்கப்பரப்பைக் காண்க.
10. ஒரு கனச்சதுரத்தின் மொத்தப்புறப்பரப்பு 486 செ.மீ $^2$ எனில் அதன் பக்கப்பரப்பைக் காண்க.
11. ஒரு கனச்சதுர வடிவிலான பால் தொட்டியானது 1,25,000 லிட்டர் கொள்ளளவைக் கொண்டுள்ளது. அத்தொட்டியின் பக்க நீளத்தை மீட்டரில் காண்க.
12. ஓர் இடத்தின் ஒரு வாரக் குளிர்கால வெப்பநிலை 26°c, 24°c, 28°c, 31°c, 30°c, 26°c, 24°c எனக் கண்டறியப்பட்டது. அந்த இடத்தின் அவ்வாரத்திற்கான சராசரி வெப்பநிலையைக் காண்க.
13. 10,17,16,21,13,18,12,10,19,22 என்ற வகைப்படுத்தப்படாத தரவுகளின் இடைநிலை அளவு காண்க.
14. கொடுக்கப்பட்டுள்ள தரவுகளுக்கு முகடு காண்க.
3.1, 3.2, 3.3, 2.1, 1.3, 3.3, 3.1

**III ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி. (21–ம் கேள்வி கட்டாய வினா)** 5x5=25

15. ஒரு முக்கோண வடிவ வயலின் பக்க நீளங்கள் 28 மீ, 15மீ மற்றும் 41மீ எனில் வயலின் பரப்பளவைக் கணக்கிடுக. மேலும் வயலைச் சமப்படுத்த ஒரு சதுர மீட்டருக்கு ₹20 செலவாகும் எனில், வயலைச் சமப்படுத்த ஆகும் மொத்தச் செலவைக் கணக்கிடுக.
16. 4 செ.மீ பக்க அளவு உடைய ஒரே மாதிரியான மூன்று கனச்சதுரங்கள் ஒன்றோடு ஒன்று பக்கவாட்டில் இணைக்கப்படும் போது கிடைக்கும் புதிய கனச்செவ்வகத்தின் மொத்தப்பரப்பு மற்றும் பக்கப்பரப்பு ஆகியவற்றைக் காண்க.

CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

17. ஒரு செங்கல்லின் அளவுகள் 24 செ.மீ x 12 செ.மீ x 8 செ.மீ ஆகும். 20மீ நீளம், 48 செ.மீ அகலம் மற்றும் 6 மீ உயரமுள்ள ஒரு சுவர் எழுப்புவதற்கு இது போன்ற எத்தனை செங்கற்கள் தேவை ?

18. ஒரு குடியிருப்பில் வாழும் மக்களின் எண்ணிக்கை வயதின் அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளது. குடியிருப்பில் வாழும் மக்களின் சராசரி வயதைக் காண்க.

| வயது | 0–10 | 10–20 | 20–30 | 30–40 | 40–50 | 50–60 |
|---|---|---|---|---|---|---|
| மக்களின் எண்ணிக்கை | 2 | 6 | 9 | 7 | 4 | 2 |

19. ஒரு வகுப்பில் கணித அலகுத்தேர்வில் 10 மாணவர்கள் 75 மதிப்பெண், 12 மாணவர்கள் 60 மதிப்பெண், 8 மாணவர்கள் 40 மதிப்பெண் மற்றும் 3 மாணவர்கள் 30 மதிப்பெண் பெற்றனர். எனில் மொத்தத்தில் சராசரி மதிப்பெண் என்ன ?

20. ஒரு வகுப்பில் தொகுத்தறி மதிப்பீட்டில் மாணவர்கள் எடுத்த மதிப்பெண்களுக்கு இடைநிலை அளவு காண்க.

| பிரிவு இடைவெளி | 0–10 | 10–20 | 20–30 | 30–40 | 40–50 | 50–60 |
|---|---|---|---|---|---|---|
| மாணவர்களின் எண்ணிக்கை | 2 | 7 | 15 | 10 | 11 | 5 |

21. தரவுகளின் முகடு காண்க.

| மதிப்பெண் | 0–10 | 10–20 | 20–30 | 30–40 | 40–50 |
|---|---|---|---|---|---|
| மாணவர்களின் எண்ணிக்கை | 22 | 38 | 46 | 34 | 20 |

**IV ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளி.** 1x8=8

22. ஓர் அறையின் நீளம், அகலம் மற்றும் உயரம் முறையே 25மீ, 15மீ மற்றும் 5மீ ஆகும். அறையின் தரை மற்றும் நான்கு சுவர்களையும் புதுப்பிக்க 1 சதுர மீட்டருக்கு ₹ 80 வீதம் செலவு ஆகும் எனில் மொத்தச் செலவைக் காண்க.

*(அல்லது)*

23. வகுப்பில் உள்ள மாணவர்களின் எடை வகுப்பறை பதிவேட்டிற்காக எடுக்கப்பட்டது. அவ்வகுப்பின் சராசரி எடையை நேரடி முறை (அ) ஊக சராசரி முறை (அ) படிவிலக்க முறை மூலம் காண்க.

| எடை (கி.கி) | 15–25 | 25–35 | 35–45 | 45–55 | 55–65 | 65–75 |
|---|---|---|---|---|---|---|
| மாணவர்களின் எண்ணிக்கை | 4 | 11 | 19 | 14 | 0 | 2 |

***/***

CamScanner